2010 ஏப்ரல் 26]

95—

மாணவர் விடுதி

***92091—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளியில், அரசு, பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் மற்றும் மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தளியில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் மற்றும் மாணவர் விடுதி துவக்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி தொகுதி மற்றும் தளியைச் சுற்றியுள்ள 15-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களிலே உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் 30 கிலோ மீட்டர் தூரம், 40 கிலோ மீட்டர் தூரம் 2, 3 பேருந்துகள் மாறி தளிக்குச் சென்று படிக்க வேண்டியிருக்கிறது. மலைக் கிராமங்கள் என்பதால் போதிய பேருந்து வசதி இல்லாத காரணத்தினால் குறிப்பாக மாணவிகளின் பெற்றோர்கள் பாதியிலேயே அவர்களது பள்ளிப் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். ஆகவே பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுடைய நலனைக் கருதி தளியிலே மாணவ, மாணவியர் விடுதியைத் துவக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகள் என்பது துவக்கப்படவில்லை.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

இதனால் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுடைய கல்வி என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு எத்தனை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமச்சந்திரன், கேள்வியை மாத்திரம் கேளுங்கள். Demand-இல் பேசுவதுபோலப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: இந்த ஆண்டு எத்தனை பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகள் துவக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, தளி பகுதியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதியும், அரசுப் பழங்குடியினர் மாணவர் விடுதியும், ஆக இரண்டு விடுதிகள் மட்டும்தான் இருக்கின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இல்லை. அங்கே தேவையிருக்கிறது என்பதையும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு புதிதாக விடுதி துவக்கப்படாவிட்டாலுங்கூட, இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு ஓரே ஆண்டிலே 4 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த ஆண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்களுடைய தொகுதிப் பக்கம் இந்த மாணவர் விடுதி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவிலே நல்ல முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. ஆகவே, இந்த ஆண்டே தளியிலே மாணவ, மாணவியர் விடுதியைத் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2010 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி இரா. இராணி.*

திருமதி இரா. இராணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உப்பிலியாபுரம் தொகுதிக்குட்பட்ட துறையூரில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற கோரிக்கைகள் நிறைய என்னிடம் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நாங்கள் இவற்றைக் கொண்டு சென்றிருக்கிறோம். விரைவிலே அனுமதி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து, அப்படி அனுமதி வருகிற நேரத்திலே உங்களுடைய பகுதியை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.*

திரு. கு. பாண்டுரங்கன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, சின்னபள்ளிக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி, பொதுத் தேர்வுகளில், தொடர்ந்து பல ஆண்டுகளாக 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று வருவதால், தனி நிகழ்வாகக் கருதி, இப்பகுதியில் நடப்பு நிதி ஆண்டிலேயே மாணவ, மாணவியர் விடுதிகள் தனித் தனியே துவக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதிய விடுதிகளைத் துவக்குவதற்கு அனுமதி வழங்குகிற நேரத்தில் அதையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும்.*